# சாட்டின் துணியில் சூப்பர் தலையணை!



ஆர்.பூமாதேவி



"வீட்டு வரவேற்பறை சோஃபாக்களில், அலுவலக நாற்காலிகளில், பயணிக்கும் கார்களில்.. என எங்கெங்கிலும் நடு நாயகமாக வீற்றிருக்கிற குட்டித் தலையணைகள் பார்க்கப் பார்க்க அழகு! இவற்றை மிக எளிதாக நாமே செய்து கொள்வது, மனதுக்கு சந்தோஷம் தருவது மட்டுமல்ல.. பர்ஸுக்கும் பாதுகாப்புத் தருவது!

இந்தத் தலையணை செய்வதற்குத்தான் இங்கே கற்றுத் தந்திருக்கிறார், சென்னை திநகரைச் சேர்ந்த கிராஃப்ட் டீச்சர் ஆர்.பூமாதேவி. இவர், கடந்த 18 வருடங்களுக்கும் மேலாக பல வகையான பெயின்ட்டிங்குகள், 3 டி மியூரல் வேலைப்பாடுகள், டெய்லரிங், எம்ப்ராய்டரி போன்றவற்றை செய்து வருவதோடு, இவை தொடர்பான வகுப்புகளும் எடுக்கிறார்.



தேவையான பொருட்கள்: சாட்டின் துணி (விரும்பிய நிறத்தில்), இரண்டு நிறங்களில் சாட்டின் ரிப்பன், ஆர்கண்டி துணி, மெல்லிய பஞ்சு, ஊசி மற்றும் மெல்லிய நூல், கத்தரிக்கோல், ஒயிட் கம்.



ஆர்கண்டி துணியை செவ்வக வடிவில், விரும்பிய அளவில் வெட்டிக் கொள்ளவும்.



ஒரு நிற சாட்டின் ரிப்பனைக் கொண்டு ஆர்கண்டி துணியின் அகலத்தை அளந்து வெட்டவும்.



மற்றொரு நிற சாட்டின் ரிப்பனால் ஆர்கண்டி துணியின் நீளத்தை அளந்து வெட்டவும்.



இந்த அளவுகளில் தேவையான அளவு ரிப்பன் துண்டுகளை வெட்டிக் கொள்ளவும்.





ரிப்பன் துண்டின் ஒரு முனையில் ஒயிட் கம் தடவி ஆர்கண்டி துணியின் நீள பக்கத்தில் வரிசையாக ஒட்டி உலர வைக்கவும்.



இதேபோல, இன்னொரு நிற ரிப்பன் துண்டுகளை அகலப் பக்கத்தில் ஒட்டி உலர வைக்கவும்.



இரண்டு நிற ரிப்பன் முனைகளும் நன்றாக உலர்ந்த பின், அவற்றை இணைத்து ஓலைப் பாய் வடிவில் பின்னவும்.



முழுவதும் பின்னி முடித்ததும், மீதி இருக்கும் ரிப்பன்களை வெட்டி, அவற்றின் முனைப் பகுதிகளை ஒயிட் கம் தடவி ஒட்டி உலர வைக்கவும்.



உலர்ந்ததும் இதை அப்படியே எடுத்து, சாட்டின் துணியின் மேல் வைத்து, சுற்றிலும் கோடுகள் வரைந்து, துணியை மட்டும் தனியாக வெட்டி எடுக்கவும்.





இந்த சாட்டின் துணியின் மேல் பின்னிய துணியைத் திருப்பி வைத்து, மூன்று பக்கங்களை மட்டும் தைத்துக் கொள்ளவும்.



இப்போது அதைத் திருப்பினால் ஒரு பை போன்ற அமைப்பு கிடைக்கும்.



பையினுள் மெல்லிய பஞ்சினைத் திணித்து..



..நான்காவது பக்கத்தையும் தைத்தால் மென்மையான தலையணை தயார்.

தொகுப்பு: ரமேஷ் ராஜா படங்கள்: கமால்

## முற்பகல் செய்யின்..

ஆதங்க கார்னர்..

இன்றைக்கு மருமகள்களின் காலமாக இருக்கிறது. ஆனால், சில வருடங்களுக்கு முன்வரையிலும் கூட, மருமகள்கள் பலரும் மாமியாரிடம் அனுபவித்த கொடுமைகள் பயங்கரமானவை!

சில வருடங்களுக்கு முன், நாங்கள் வேதாரண்யத்தில் குடியிருந்தபோது, எங்கள் பக்கத்து வீட்டில் குடியிருந்தது ஒரு குடும்பம். அந்த வீட்டு மருமகள் பரம சாது! அவளை நிற்க விடாமல் வேலை வாங்குவதும், ஏசுவதும், வயிற்றுக்குக் கூடப் போடாமல் பட்டினி போடுவதும், பிறந்த வீட்டுக்கு அனுப்பி தான் கேட்டதை வாங்கி வரச் சொல்வதுமாக.. மகா ராட்சஸி அந்த மாமியார்!

ஒருநாள் அந்த மருமகள், தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளித்து விட்டு, வெளியில் உட்கார்ந்து தலையை உலர்த்தியவாறு, தன் வைரத் தோடுகளைப் போட்டுக் கொண்டிருந்தாள். அப்போது வெளியில் வந்த அந்த மாமியார், "என்னடி.. சொகுசா ராணி மாதிரி உக்காந்திருக்கே.. உள்ளே வேலை இல்லையா?" என்று கேட்க, தான் தோடுகளைப் போட்டுக் கொண்டிருப்பதாக அப்பெண் வெகுளியாகச் சொல்ல, உடனே அந்த வைரத் தோடுகளைப் பிடுங்கி வெளியே எறிந்து விட்டாள் அந்த மாமியார். வெளியே வேதாரண்யத்துக் கடல் மண் பரவியிருந்தது.

அந்தப் பெண் அழ, "தோடுகளை எடுத்துட்டுத்தான் உள்ளே வரணும்" என்று சொல்லி விட்டு மாமியார் உள்ளே போய் விட, உச்சி வெயில் நேரம்வரை கால் புதையும் மணலில், அழுதபடி கம்மல்களைத் தேடினாள் அந்தப் பெண். அந்த நேரத்தில், எதேச்சையாக அங்கு வந்த அவளுடைய தந்தை அவளைக் கண்டு மிகவும் வருத்தப்பட்டார். "மீண்டும் வைரத்துடன் வந்தால்தான் அவளை உள்ளே விடுவேன்" என்று மாமியார் சொல்ல, பெண்ணைத் தன்னோடு அழைத்து வந்து, சில மாதங்கள் கழித்து எப்படியோ தோடு வாங்கிக் கொடுத்து பெண்ணை அனுப்பி வைத்தார்.



பல மாமியார்களும் முற்பகல் விதைத் ததுதான்.. பிற்பகலாகிய இன்று 'முதியோர் இல்லங்கள்' ஆக வந்து விளைந்திருக்கிறது. விதைக்காதவர்களும்கூட அனுபவிக்க வேண்டியதாயிருக்கிறது!

- மரகதம், கோவை